

# ஜக்கி முத்துகள்

★ வழிபாட்டை நடிப்பாக செய்தீர்கள் என்றால், அது மிகவும் கொச்சையானது. உங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றின் மீதும் வழிபாட்டு உணர்வுடன் இருந்தீர்கள் எனில் அது மிக அழகானது.

★ மனிதனின் உண்மையான தகுதிகள், போட்டியின்போது வெளிப்படாது.

★ கல்விமுறையில் கருத்துகளையும், நம்பிக்கைகளையும் திணிக்காமல் இருந்தால் குழந்தை இயல்பாகவே உள்நோக்கி பார்க்கும்.

★ வாழ்வின் எந்த ஒரு படியிலும், குறிப்பாக ஆன்மீகப் படியில் உங்களுக்கு தீவிரமும், ஈடுபாடும் இருக்கவில்லை என்றால், நீங்கள் எங்குமே சென்றடைய மாட்டீர்கள்.

★ உங்களைச் சுற்றியுள்ள உயிர்களுக்கு என்ன நிகழ்கிறது என்ற அக்கறை இல்லாமல் நீங்கள் இருப்பீர்களேயானால் நீங்கள் ஒரு குற்றவாளி.

★ மனிதராகப் பிறந்தும் உங்களுடைய எல்லையில்லாத் தன்மையை இன்னமும் உணராமல் இருந்தால், மனிதராகப் பிற்வி எடுத்ததே வீண்தான்.

★ வாழ்வைப் பற்றிய புரிதல்கள் எனக் கூறப்படும் எல்லாமே முற்றிலும் தவறானவைகளே. நீங்கள் வாழ்வை புரிந்துகொள்ள இயலாது. வாழ்வ்வ உணரத்தான் முடியும்.

★ உண்பதில் உள்ள உண்மையான ஆனந்தமே நம் உயிரோடு இன்னொரு உயிர் இணைகிறது என்று விழிப்புணர்வாய் பார்ப்பதுதான்.

★ நமக்கு அரசியல் புரட்சியும் தேவையில்லை. மதப் புரட்சியும் தேவையில்லை. மனிதரின் உள்மலர்ச்சிதான் தேவையாக இருக்கிறது.